

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (5.4.2025) தலைமைச் செயலகத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்கும் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தா.மோ.அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர். நா.எழிலன், ஆர்.மூர்த்தி, ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர்கள், முதன்மைச் செயலாளர்கள், செயலாளர்கள் மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இலங்கை மீனவர்கள் இருவர் மற்றும் அவர்களது படகு

# தமிழ்நாடு அரசு நல்லெண்ண அடிப்படையில் விடுதலை!

சென்னை, ஏப். 6-

மனிதாபிமானக் கோணத்திலும், இருநாட்டு நல்லுறவுகளையும் கருத்தில் கொண்டு, கடந்த 20.03.2025 அன்று கடலோர காவற்படையால் சிறைபிடிக்கப்பட்ட இலங்கை நாட்டைச் சேர்ந்த இரண்டு மீனவர்கள் மற்றும் 1DAY 0035 TCO என்ற பதிவெண் கொண்ட படகு, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு விரைவாகவும், தேவையான அனைத்து நடைமுறைகளும் பின்பற்றி நேற்று முன்தினம் (04.04.2025) இலங்கை மீனவர்கள் இருவர் மற்றும் அவர்களது படகினை விடுவித்துள்ளது.

இது, கடலோர பிரச்சினைகளுக்கு தமிழ்நாடுஅரசு எப்போதும் மனிதாபிமான பார்வையுடன் அணுகும் என்ற உறுதியை மீண்டும் ஒருமுறை வலியுறுத்துகிறது.

இவ்வாறான நடவடிக்கைகள், இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் நல்லிணக்கத்தை வலுப்படுத்துவதோடு, கடலோரங்களில் வாழும் மீனவர்களின் உரிமைகள் மற்றும் நலன்களை பாதுகாக்கும் தமிழ்நாடு அரசின் உறுதிப்பாட்டையும் வெளிப்படுத்துகின்றன. நம்பிக்கையும், புரிதலும், ஒருவருக்கொருவர் மதிப்பும் கொண்ட உறவு களை கட்டியெழுப்புவதே தமிழ்நாடு அரசின் நிலையான நோக்கமாகும்.

### நீதித்துறையில் நீதிபதிகள் பணியிடங்களில்

# பட்டியல் - பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த நீதிபதிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

### மக்களவையில் கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்வி!

புதுடெல்லி, ஏப்.06

நீதிபதிகள் பணியிடங்களில் பட்டியல் மற்றும் பழங்குடி சமூகத்தினருக்கான பிரதிநிதித்துவம் குறித்து, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. முக்கியமான கேள்விகளை மக்களவையில் எழுத்துபூர்வமாக எழுப்பினார்.

அதன்படி, "மாவட்ட நீதிமன்றங்களில், குறிப்பாக துணை நீதிமன்றங்களில் பணியாற்றும் பட்டியல் சமூக மற்றும் பட்டியல் பழங்குடி சமூகங்களைச் சேர்ந்த நீதிபதிகளின் எண்ணிக்கை, மாநில வாரியாக எவ்வளவு?

பல்வேறு சட்டங்களின் கீழ் அமைக்கப்பட்ட மத்திய மற்றும் மாநில தீர்ப்பாயங்களில் பணியாற்றும் மேற்கூறிய சமூகங்களைச் சேர்ந்த நீதித்துறை அதிகாரிகளின் எண்ணிக்கை குறித்த தரவுகளை அரசாங்கம் பராமரிக்கிறதா, அப்படியானால், அதன் விவரம் என்ன?

கடந்த பத்து ஆண்டுகளில் பட்டியல் மற்றும் பட்டியல் பழங்குடி சமூகங்களைச் சேர்ந்த நீதிபதிகள் அல்லது நீதித்துறை அதிகாரிகளின் நியமன விவரங்கள் மாநில வாரியாக என்ன?

உயர் நீதிமன்றங்களில் நீதிபதிகளை நியமிக்கும் செயல்பாட்டில் இடஒதுக்கீடு அளவுகோல்கள் பின்பற்றப்படுகிறதா, அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இல்லையென்றால், அதற்கான காரணங்கள்?" என கனிமொழி கருணாநிதி எம்.பி. கேட்டிருந்தார்.

இந்த கேள்விகளுக்கு ஒன்றிய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சகத்தின் தனிப் பொறுப்புடன் கூடிய இணையமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் அளித்த பதிலில்.



"நீதித்துறையின் மேலாண்மை தகவல் அமைப்பு (MIS) போர்ட்டலில் உள்ள தகவல்களின்படி, 02.04.2025 அன்றைய நிலவரப்படி, நாடு முழுதும் குறிப்பாக மாவட்ட மற்றும் துணை நீதிமன்றங்களில் நீதிபதியாக பணியாற்றும் பட்டியல்பழங்குடி சமூகத்தினரின் எண்ணிக்கை 3876 ஆகும். இவர்களில் உரிமையியல் நீதிபதிகள் (ஜூனியர்) எஸ்.சி. 1371, எஸ்.டி.403, உரிமையியல் நீதிபதிகள் சீனியர் எஸ்.சி. 755, எஸ்.டி. 365 மாவட்ட நீதிபதிகள் எஸ்.சி. 724, எஸ்.டி. 258 என்ற எண்ணிக்கையில் பணிபுரிகிறார்கள்.

குறிப்பாக தமிழ்நாட்டில் உரிமையியல் நீதிபதி கள் (ஜூனியர்) எஸ்.சி.119, எஸ்.டி.5, உரிமையியல் நீதிபதிகள் சீனியர் எஸ்.சி.57, எஸ்.டி.4 மாவட்ட நீதி பதிகள் எஸ்.சி.35, எஸ்.டி.1 என்ற அளவில் பணியில் உள்ளனர்.

பல்வேறு சட்டங்களின் கீழ் அமைக்கப்பட்ட மத்திய மற்றும் மாநில தீர்ப்பாயங்களில் பணியாற்றும் மேற்கூறிய சமூகங்களைச் சேர்ந்த நீதித்துறை அதிகாரிகளின் எண்ணிக்கை மையமாக பராமரிக்கப்படவில்லை.

கடந்த பத்து ஆண்டுகளில், பட்டியல் மற்றும் பழங்குடி சமூகங்களைச் சேர்ந்த நீதிபதிகள் அல்லது நீதித்துறை அதிகாரிகளின் நியமனங்கள் குறித்த விவரங்கள், மாநில வாரியாக, துறையில் கிடைக்கவில்லை. இருப்பினும், MIS போர்ட்டலில் கிடைக்கும் தகவல்களின்படி, 31.12.2020 நிலவரப்படி நாடு முழுதும் குறிப்பாக மாவட்ட நீதிமன்றங்களில், துணை நீதிமன்றங்களில் நீதிபதியாக பணியாற்றும் பட்டியல்பழங்குடி சமூகத்தினரின் எண்ணிக்கை 3524 ஆகும். இவர்களில் உரிமையியல் நீதிபதிகள் (ஜூனியர்) எஸ்.சி. 1330, எஸ்.டி.466, உரிமையியல் நீதிபதிகள் சீனியர் எஸ்.சி. 681, எஸ்.டி. 287 மாவட்ட நீதிபதிகள் எஸ்.சி. 565, எஸ்.டி. 195 என்ற எண்ணிக்கையில் பணிபுரிந்தார்கள்.

இந்திய அரசியலமைப்பின் பிரிவுகள் 124, 217 மற்றும் 224 இன் கீழ் உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களுக்கு நீதிபதிகள் நியமனம் செய்யப்படுகிறார்கள். இது எந்த சாதி அல்லது வகுப்பினருக்கும் இடஒதுக்கீட்டை வழங்காது. எனவே, உயர்நீதிமன்ற நீதிபதிகளில் SC, ST மற்றும் OBC களின் பிரதிநிதித்துவம் தொடர்பான வகை வாரியான தரவு மையமாக பராமரிக்கப்படவில்லை. இருப்பினும், 2018 முதல், உயர் நீதிமன்ற நீதிபதிகள் பதவிக்கான பரிந்துரைகள் செய்யப்படும்போது (உச்ச நீதிமன்றத்து டன் கலந்தாலோசித்து தயாரிக்கப்பட்டது) அவர்களின் சமூக பின்னணி குறித்த விவரங்களை வழங்க வேண்டும். அதன்படி, பரிந்துரைக்கப்பட்டவர்கள் வழங்கிய தகவலின்படி, 2018 முதல் நியமிக்கப்பட்ட 719 உயர் நீதிமன்ற நீதிபதிகளில் 22 பேர் SC பிரிவைச் சேர்ந்தவர்கள், அதே சமயம் 16 பேர் ST பிரிவைச் சேர்ந்தவர்கள்.

நடைமுறை குறிப்பாணையின்படி (MoP) உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகளை நியமிப்பதற்கான முன்மொழிவுகளைத் தொடங்குவதற்கான பொறுப்பு இந்திய தலைமை நீதிபதியிடம் உள்ளது, அதே நேரத்தில் உயர் நீதிமன்ற ங்களில் நீதிபதிகளை நியமிப்பதற்கான முன்மொழிவுகளைத் தொடங்குவதற்கான பொறுப்பு சம்பந்தப்பட்ட உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியிடம் உள்ளது. இருப்பினும், உயர் நீதிமன்றங்களில் நீதிபதிகளை நியமிப்பதில் சமூக பன்முகத்தன்மையை உறுதி செய்வதற்காக, நீதிபதிகளை நியமிப்பதற்கான முன்மொழிவு களை அனுப்பும்போது, பட்டியல் சாதிகள், பட்டியல் பழங்குடியினர், பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சிறுபான்மையினர் மற்றும் பெண்களைச் சேர்ந்த பொருத்தமான வேட்பாளர்களுக்கு உரிய பரிசீலனை வழங்கப்பட வேண்டும் என்று அரசு உயர் நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகளிடம் கோரிக்கை விடுத்து வருகிறது. உச்ச நீதிமன்ற கொலீஜியத்தால் பரிந்துரைக்கப்படும் நபர்கள் மட்டுமே உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகளாக நியமிக்கப்படு கிறார்கள்.

மாவட்ட மற்றும் துணை நீதிமன்றங்களில் நியமனங்கள் இந்திய அரசியலமைப்பின் பிரிவுகள் 233 மற்றும் 234 இன் படி, மாநில அரசுகள் மற்றும் உயர் நீதிமன்றங்களின் அதிகார வரம்பிற்குள் வருகின்றன. ஆட்சேர்ப்பு செயல்முறை, உயர் நீதிமன்றங்களுடன் கலந்தாலோசித்து மாநில அரசுகளால் உருவாக்கப்பட்ட விதிகளால் நிர்வகிக்கப்படுகிறது" என்று குறிப்பிட்டுள்ளார் ஒன்றிய அமைச்சர்.

### தமிழ்நாடு அரசு தனது மாநிலப் பங்கை சரியான நேரத்தில் விடுவித்தபோதிலும்

# பெண்கள் - குழந்தைகளுக்கான நலத்திட்ட நிதிகளை வழங்குவதில் தாமதம் ஏன்?

### மக்களவையில் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, ஏப்.6-

"பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான நலத்திட்ட நிதிகளை வழங்குவதில் தாமதம் ஏன்?" என மக்களவையில் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத்தலைவர் தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாடு உட்பட அனைத்து மாநிலங்களுக்கும் ஒன்றிய அரசு நிதியுதவி அளிக்கும் திட்டங்களில் (CSS) சரியான நேரத்தில் தாமதமின்றி நிதி வழங்கப்படுவதை உறுதி செய்ய ஒன்றிய அரசு ஏதேனும் செயல்முறை அமைப்புகளை அமைத்துள்ளதா என மக்களவையில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினரும் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவருமான தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.



அதன் விவரங்கள் பின்வருமாறு :-

தமிழ்நாடு அரசு தனது மாநிலப் பங்கை சரியான நேரத்தில் விடுவித்த போதிலும், ஒன்றிய அரசின் நிதியுதவி அளிக்கும் திட்டங்களான (CSS) மிஷன் சக்சம் அங்கன்வாடி & போஷன் 2.0 (Saksham Anganwadi) & (Poshan 2.0) மற்றும் மிஷன் சக்தி & மிஷன் வாத்சல்யா (Mission Shakti and Mission Vatsalya) போன்றவற்றிற்கான நிதியை விடுவிப்பதில் ஒன்றிய அரசு தாமதம் செய்கிறதா? அப்படியெனில், அதன் விவரங்களை தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்.

மாநிலங்களுக்கு கடைசி நேரத்தில் நிதி வெளியிடுவதின் காரணமாக, செலவழிக்கப்படாத திட்ட நிதியை அடுத்த நிதியாண்டிற்கு எடுத்துசெல்வதை தடுக்கும் வகையில் ஒன்றிய அரசு நிதி வழங்கும் அட்டவணையை மறுசீரமைக்க பரிசீலிக்கிறதா? அப்படியெனில்,அதன் விவரங்களை தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்.

நிதி ஆண்டு முடிவில் ஏற்படும் காலதாமதங்களைத் தடுக்க, ஒவ்வொரு காலாண்டின் தொடக்கத்திலும் ஒன்றிய அரசின் பங்கு வெளியிடப்படுவதை உறுதிப்படுத்த அமைச்சகம் எடுத்துள்ள அல்லது எடுக்க முன்மொழியும் நடவடிக்கைகள் என்ன எனக் கேள்வி எழுப்பினார்.

தமிழ்நாடு உட்பட அனைத்து மாநிலங்களுக்கும் சரியான நேரத்தில் தாமதமின்றி நிதி வழங்கப்படுவதை உறுதி செய்ய ஒன்றிய அரசு ஏதேனும் செயல்முறை அமைப்புகளை அமைத்துள்ளதா? அப்படியெனில், அதன் விவரங்களை தெரியப்படுத்தவும் என தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! அமைச்சர் பி.மூர்த்தி நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்!

# வில்லிவாக்கம் மேற்கில் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

### மேயர் பிரியா - தயாநிதிமாறன் எம்.பி. - அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ - கூ.பீ.ஜெயின் எம் .சி. பங்கேற்பு! ஆர்.கோபாலகிருஷ்ணன் தலைமை!

சென்னை, ஏப். 6-

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் 94 வது வட்டத்தில் திராவிட முன்னேற்ற கழகத்தின் மக்கள் முதல்வரின் மனிதநேய திருவிழாவை முன்னிட்டு மனிதநேயம் - 43 'அடுத்தவர் பாரம் ஏற்போம்! அன்போடு குறைகள் தீர்ப்போம்!' எனும் தலைப்பில் (06.04.2025 - ஞாயிற்றுகிழமை) காலை 9.00 மணிக்கு வில்லி வாக்கம், சிட்கோ நகர் நடைபெறும் சுமைதூக்கும் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்ட பிரதிநிதி ஆர்.கோபாலகிருஷ்ணன் தலைமை வகிக்கிறார்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும், சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளருமான பி.கே. சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், வில்லி வாக்கம் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றி அழகன், வில்லிவாக்கம் மேற்கு பகுதிச் செயலாளரும், 8 வது மண்டலக் குழுத் தலைவர் கூ.பீ. ஜெயின் எம்.சி., வில்லி வாக்கம் கிழக்கு பகுதி செயலாளர் வே.வாசு, பொதுக்குழு உறுப்பினர் சாவித்திரி ஸ்ரீ வீரராகவன், டி.வி.செம்மொழி எம்.சி., மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சுதா தீனதயாளன் எம்.சி., மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வானவில் விஜய், லதா வாசு எம்.சி., ஆர்.வரதன் , ஜி,ஜெ. பிரபு, எம்.சுரேஷ். சிட்கோ சேகர், ஜெ.எஸ்.பிரபு, வி.து. ராமமூர்த்தி, பா.இளையா, மு.கலைச் செல்வி, ஐ.சி.எப். சுரேஷ்பாபு, ஆர்.தீ னதயாளன், க.சுகுமாரன், மா.அகிலன், பா.ஜானி, சொ. முருகேசன், ப.லோகுபாபு, கோ.மணிவேந்தன், மா.கபிலன்,பா. தே.தீனதயாளன், கே.எஸ். பாபு, க.மணிமாறன், எஸ். கே.பி.தீபக்குமார், ம.சுந்தர் எபி, ஆ.சக்திவேல், பூ.சத்தியேந்திரன், ஜெ.கணேசன், இண்டிரியார் பா.ஆறுமுகம், கோனிகா பாஸ்கர், இரா. ஷாலீலா, கேபிள். ஜெ.கண்ணன், கே.ஞானசேகரன், எ. தேவராஜ், ஜெ.செல்வ ராஜ், ஸ்ரீ.ஸ்ரீதர் ஆகியோர் வரவேற்புரையாற்றுகின்றனர்.


இந்நிகழ்ச்சியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி கலந்து கொண்டு சுமைதூக்கும் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

தலைமை செயற்க்குழு உறுப்பினர், மேயர் பிரியா, தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவன தலைவர் ப.ரங்கநாதன், வில்லிவாக்கம் தொகுதி தேர்தல் பார்வையாளர் ஓ.ஏ. நாகலிங்கம், புரசை டி.சம்பத், டி.தாமோதரன், ம.அமுல், நா.அறிவுடைநம்பி, எ.வேதா, விக்னேஷ் சீனிவாசன், ச. மனோகரன், கே.பாஸ்கர், சி.தேவராஜ், காஞ்சி.செ .துரை, வி.சபாபதி, வ. ரமேஷ் பாபு, மு.பரமா னந்தன், டி. ஸ்டாலின், ந.குமார், எ.சத்திய நாராயணன், கி. ஜெய்சங்கர், ப.செந்தில்குமார், எஸ்.துரை பாபு, கே.ராஜா, வி.ஆர். ஜெயக்குமார், வழக்கறிஞர் இந்திரஜித், காஞ்சி பாஸ்கர், எஸ்.எஸ்.மணிகண்டன், ப. மலர்கொடி, சிட்கோ.எஸ். அன்வர்தீன், சாந்திபில்லி, தே.ச.சுந்தர், ஜி.கே.வெங்கட்,

வழக்கறிஞர் பி.கோபிலதா, வழக்கறிஞர்.ஜெ.சரவணன், வழக்கறிஞர் மா.முரளி வினோத், ஓசோன் மனோகரன், பொறியாளர் எம்.எஸ். ரமேஷ், டாக்டர் எம்.ஜி.திவ்யானந்தன், வழக்கறிஞர் சாந்தனு, ஸ்டண்டு.வி.புஷ்பராஜ், ஜிம்.முரளி(எ) சையத், டி. பாஸ்கரன், ச.காளிதாசன், சிட்கோ த.விஜயகுமார், கே. தங்கவேல்ராஜன், டி.சைய த்தியமத்துல்லா, செங்கை சண்முகம், ஆ.சுரேஷ்குமார், வழக்கறிஞர் எம்.குணசேகரன், என்.எஸ்.விஜயகுமார், வழக்கறிஞர் கே.சுப்பிர மணி, எஸ். பி.ஜெகா, பி.ஜெயந்தி, உ.பிரசன்ன வேலன், வழக்கறிஞர் பா.சுந்தர், கா. யுவராணி, கே.ஜி.அய்யாதுரை, எம். முத்து, ஆர்.ராஜசேகர், என். மோகன்குமார், வி.ராஜ மாணிக்கம், ஓம்.புரசை சேகர், சா.அருண்குமார், ராபர்ட் ராஜன், எம்.விஜயகுமார், பிரகதீஷ்வர், கே.பி.சரவணன், வெ.மகேந்திரன், அனுசுயா பாண்டுரங்கன், மு. கிருஷ்ணவேணி, வெ.ராஜேஷ், எஸ். வெற்றிவேல், சண்.இரவி, எஸ்.பழனிவேல், எம்.செந்தில் குமார், ம.ஜெகதீஸ்வரன், டி. ஞானகிராமன், பிரேமாதயாளன், ஆர்.இருதயமேரி, வழக்கறிஞர் ஜி. அய்யனார், ஆர். மோகன்ராஜ், டி.எச்.செல்வராஜ், ந.வேணு, பி.வேணுகோபால், எ.மணிமாறன், ஆர்.நித்யானந்தி, அ.குபேரன், மு. சரவணன், ஆ.புஷ்பராஜ், ரா.கணேஷ்குமார், ரா.தட்சிணா முர்த்தி, கோ.பி. சண்முகம், மோ.கார்த்திக் மற்றும் கழக முன்னோடிகள், பாக முகவர்கள் (BLA-2), பாக உறுப்பினர்கள் (BLC) அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதி சிட்கோ ப.சுரேஷ் பாபு நன்றி கூறுகிறார்.

## வாட்ஸ் அப்பில் வந்த செய்தி !




### 19ஆம் தேதி அன்று கழகத் தலைவர் வருகை குறித்து

# திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அவசர ஆலோசனைக் கூட்டம்!

### அமைச்சர் ஆவடி சாமு நாசர் - மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ சிறப்புரை! வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

திருவள்ளூர் ஏப் 06;

திருவள்ளூர் மேற்கு மாவட்ட அவசர செயற்குழு கூட்டம்வருகிற திருவள்ளூரில் மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.திராவிடபக்தன் தலைமையில் நடைபெற்றது இதில் தலைமை செயற்குழு உறுப்பினரும், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினருமான வி. ஜி.ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தார் நகரக் கழக செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன் வரவேற்புரையற்றினார்

இதில் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சாமு.நாசர் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்கள்

அப்போது பேசிய அமைச்சர்

நம்மும் நாளும் உயிராய் போற்றி வணங்கும் நம்முடைய ஒப்பற்ற தலைவர் தமிழக முதல்வர் தளபதி அவர்கள் ஏப்ரல் 19ம் தேதி அன்று திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க நமது திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி அடுத்த ஆண்டார்குப்பம் பகுதிக்கு வருகை தர உள்ளார்

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி மீஞ்சூர் சில இடங்களில் கழகத் தலைவர் அவர்கள் Road show மக்கள் சந்திப்பு வரவேற்பு நிகழ்ச்சியில் சாலையில் இடது புறமா பொது மக்களுக்கு அனைவரும் அணி திரண்டு நின்று உற்சாகம் வரவேற்பு அளித்திட திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர்கள் பிரம்மாண்டமான ஏற்பாடுகளை செய்திட வேண்டும்

ஒன்றிய நகர பேரூர் கழகத்தினர்கள் தமது கரங்களில் கழக கொடி வரவேற்பு பதாகைகளை ஆயிரக்கணக்கில் அணி திரண்டு திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தினர்கள் வரவேற்பு அளிக்க வேண்டும் என பேசினார்

இதனை தொடர்ந்து திருவள்ளூர் அடுத்த திருப்பாச்சூரில் கழக தலைவர் அவர்கள் கலந்து கொண்ட கண்டன பொதுக்கூட்டத்திற்கு திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் உட்பட்ட கழக நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த கழக நிர்வாகி அனைவருக்கும் இக்கூட்டம் வாயிலாக நன்றிகளையும் பாராட்டுகளை தெரிவித்து கொண்டு சிறப்பாக செயல்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் அணிகளின் அமைப்பாளர்களுக்கு கைகடிகாரம் பரிசாக வழங்கினார்

இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, கழக விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.டி.இ.ஆதிசேசன், கழக நெசவாளர் அணி துணைத் தலைவர் ஒ.ஏ.நாகலிங்கம், திருத்தணி தொகுதி பார்வையாளர் சண்முகநாதன், திருவள்ளூர் தொகுதி பார்வையாளர் மாஸ்டர் பெ.சேகர், மாநில தொண்டர் அணி பயிற்சியாளர் மாஸ்டர்.இ.குருதாஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் டாக்டர்.வி.சி.ஆர்.குமரன், பா.உதயமலர் பாண்டியன், எம்.மிதுன்சக்கரவர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் ப. சிட்டிபாபு ஆகியோர் கலந்துக் கொள்கின்றனர்.

மேற்கண்ட கூட்டத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட, ஒன்றிய நகர பேரூர் அணிகளின் அமைப்பாளர்கள் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் க.அரிகிருஷ்ணன், மோ.ரமேஷ், கூளூர் எம்.ராஜேந்திரன், எஸ். மகாலிங்கம்,

டி.கிறிஸ்டி, வி. வினோத்குமார், என்.கிருஷ்ணன், சி.என். சண்முகம், பெ.பழனி, சி.ஜெ. சீனிவாசன், கே.ராஜேந்திரன், டி.ஆர்.கே.பாபு, சி.ஜெ.செந்தில்குமார், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் தலைவர்கள் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் அவசர ஆலோசனை கூட்டம் திருவள்ளூரில் நடைபெற்றது. இதில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ ஆகியோர் கலந்துகொண்டு கழகத் தலைவர் அவர்கள் வருகின்ற 19ஆம் தேதி அன்று திருவள்ளூர் மாவட்டத்திற்கு வருகை தருவது குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்கள். உடன் வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ, எம். பூபதி, கே.திராவிடபக்தன், ஆர்.டி.இ.ஆதிசேசன், ஒ.ஏ.நாகலிங்கம், சண்முகநாதன், மாஸ்டர் பெ.சேகர், மாஸ்டர்.இ.குருதாஸ், டாக்டர்.வி.சி.ஆர். குமரன், பா.உதயமலர் பாண்டியன், எம்.மிதுன்சக்கரவர்த்தி, ப.சிட்டிபாபு, சி.சு.ரவிச்சந்திரன் உள்பட பலர் உள்ளனர்.